பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**21 06 2026** **08 30**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** யோகா வெறும் உடற்பயிற்சியாக மட்டுமின்றி உள்ளுணர்வை வெளிப்படுத்தும் கருவியாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** உடல், மனம், உணர்வு ஆகியவற்றை வலுப்படுத்தும் பயிற்சி முறையாக யோகா அமைந்துள்ளது என்று மத்திய அமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

**3.** மக்களுக்கு தரமான மருத்துவ சேவையை வழங்கும் நோக்குடன் மருத்துவர்கள் செயல்பட வேண்டும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

**4.** பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் மாணவர்களை பாதிக்கும் எத்தகைய செயலையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா கூறியுள்ளார்.

5. உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சர்வதேச யோகா தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

உடல், மனநலன், நலவாழ்விற்கு உதவிடும் யோகக்கலை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்து வகையில், ஆண்டுதோறும் ஜுன் **21**-ம் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

"ஆரோக்கியமான முதுமைக்கான யோகா" என்ற கருப்பொருடன் இந்த ஆண்டிற்கான சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது.

கொல்கத்தாவில் நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, யோகா வெறும் உடற்பயிற்சியாக மட்டுமின்றி உள்ளுணர்வை வெளிப்படுத்தும் கருவியாக திகழ்கிறது என்று கூறினார்.

யோகா தற்போது உலகின் பெருமளவிலான நாடுகளால் கொண்டாடப்படும் சமூக நிகழ்வாக உருவெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொல்கத்தாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச யோகா தினத்தில் பங்கேற்பது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று பிரதமர் கூறினார்.

ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைந்த நலவாழ்விற்கு யோகா முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

யோகா அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பதாக அவர் கூறினார்.

சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்கும் அனைவருக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு பகுதியாக, இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியம், யோகக்கலையின் மரபுகளை ஒன்றிணைத்து, நாடு முழுவதும் 100 முக்கிய இடங்களில் சிறப்பு சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகளை மத்திய கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

சென்னை தியாகராயர் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில், மத்திய நிலக்கரித்த துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி பங்கேற்றார்.

சென்னையை அடுத்த மகாபலிபுரத்தில் நடைபெற்ற சர்வதேச யோகா நிகழ்ச்சியில், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்துகொண்டார்.

முன்னதாக நேற்று புதுதில்லியில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம், யோகா குறித்த விழிப்புணர்ப்பு ஓட்டம் மற்றும் சிறப்பு ஜூம்பா அமர்வுக்கும் ஏற்பாடு செய்திருந்தது.

யோகாவை அன்றாட வாழ்வில் ஒரு அங்கமாக இணைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

இத்தினத்தையொட்டி உலகளவில் 2 ஆயிரத்து 500 இடங்களில் யோகா நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

210க்கும் மேற்பட்ட இந்தியத் தூதரகங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யோகா அமர்வுகள், கூட்டு நல்வாழ்வுக்கான உலக அளவிலான இயக்கமாக அதன் சிறப்பை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது.

இதனையடுத்து, ஷ்யாமா பிரசாத் முகர்ஜி துறைமுகத்தில், சுயசார்புத் திட்டத்தின் கீழ், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட துனகிரி, சன்ஷோதக் மற்றும் அக்ரே ஆகிய மூன்று போர்க்கப்பல்களை பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

<<<<>>>>

உடல், மனம், உணர்வு ஆகியவற்றை வலுப்படுத்தும் பயிற்சி முறையாக யோகா அமைந்துள்ளது என்று மத்திய அமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சுகாதாரமான முழுமையான வாழ்விற்கு உதவிடும் பயிற்சி முறையாக யோகா திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின்கீழ் யோகா தற்போது உலக அளவிலான நலவாழ்வு இயக்கமாக உருவெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

யோகக் கலை, இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் முக்கிய அங்கமாக திகழ்கிறது என்று மத்திய அமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மருத்துவர்கள் சேவை மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

கோவை ESI மருத்துவக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், இந்த மருத்துவமனையில் நவீன மருத்துவக் கருவிகள், மாணவர்களுக்கான வசதிகள், மருத்துவர்கள் நியமனம் என அனைத்தையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

போட்டி நிறைந்த உலகில் மருத்துவப் படிப்புடன் மாணவர்கள் தங்கள் உடல் நலத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நீட் நுழைவுத் தேர்வை மாணவர்கள் மன வலிமையுடன் எதிர்கொள்ள வேண்டும் என்று திரு. அருண்ராஜ் வலியுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தின் வளர்ச்சிக்கான சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. வெங்கட்ரமணன் தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த ஆவடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்வி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், குடும்ப அட்டைதாரர்களுக்கான கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பருவமழை தொடங்கவுள்ள நிலையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் வீணாகாமல் தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று திரு. வெங்கட்ரமணன் கூறினார்.

<<<<>>>>

பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் மாணவர்களை பாதிக்கும் எத்தகைய செயலையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசுப் பள்ளிகளில் அத்துமீறி நுழைந்து வகுப்புகளை இடையூறு செய்யும் த.வெ.க. நிர்வாகிகளின் செயல்பாடுகள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கான இடமாக பள்ளிகள் திகழ்கிறது என்றும், இதில் அரசியல் கட்சிகளோ அமைப்போ தனி நபரோ அரசியல் சுய லாபத்திற்காக பயன்படுத்திக்கொள்ளக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திருமதி பிரேமலதா கேட்டுக்கொண்டார்.

*<<<<>>>>*

கடலூர் மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற சிதம்பரம் நடராஜர் கோவிலில் ஆனிதிருமஞ்சன திருவிழா கடந்த 13ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று காலை வெகு விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Ilanchezhiyan — 31 Sec)**

*<<<<>>>>*

***இருவரிச் செய்திகள்***

லெபனானில், இஸ்ரேல் ராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதால், ஹோர்முஸ் நீரினை மீண்டும் மூடப்பட்டுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.

-------------

கிரீஸ் நாட்டில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 5 புள்ளி எட்டாக பதிவானது

-------------

பாகிஸ்தானின் வடகிழக்குப் பகுதியில் உள்ள கைபர் பக்துன்குவா மாகாணத்தில், நிகழ்ந்த குண்டு வெடிப்பில் ஏழு பேர் உயிரிழந்தனர்.

-------------

உத்தரப்பிரதேசத்தில் வீடுகள் கணக்கெடுப்பு உள்ளிட்ட முதற்கட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணிகள் முழுமையாக திட்டமிட்டபடி நேற்று நிறைவடைந்தது.

-------------

கைலாஷ் - மானசரோவர் யாத்திரையின் முதலாவது யாத்ரீகர்கள் குழு, நாதுலா பாஸ் வழியாக புறப்பட்டுச் சென்றது.

-------------

ஹரியானா மாநில நீர்வள பாதுகாப்புத் திட்டத்திற்காக, உலகவங்கி 4 ஆயிரம் கோடி ரூபாய் கடனுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

-------------

திருவண்ணாமலையில் நேற்று நடைபெற்ற மாவட்ட மேற்பார்வைக் குழு கூட்டத்தில் மத்திய அரசின் நிதியுதவிடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செயப்பட்டது.

-------------

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில், **833** பயனாளிகளுக்கு **4** கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திருமதி விஜயலட்சுமி வழங்கினார்.

-------------

கடலூர் மாவட்டம் வெலிங்டன் நீர்தேக்கப் பகுதியில், நீர்வளத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து மாநில அமைச்சர் திரு. ராஜ்குமார் ஆய்வு செய்தார்.

-------------

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சானடோரியம் மேம்பாலம் அருகே கொட்டப்பட்டுள்ள மருத்துவக் கழிவுகளை எரித்ததால், வாகன ஓட்டிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது.

-------------

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

மான்செஸ்டரில் இப்போட்டி இந்திய நேரப்படி இன்றிரவு **7** மணிக்கு தொடங்குகிறது.

----------

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 9 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான், 44 புள்ளி இரண்டு ஓவரில், 218 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனையடுத்து, 219 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இந்திய அணி, 28 புள்ளி 4 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 224 ரன் எடுத்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், இந்தியா அனைத்துப் போட்டிகளிலும் வென்றது.

----------

இந்தியா - இலங்கை ஏ அணிகளுக்கு இடையேயான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இன்று நடைபெறுகிறது.

தம்புலாவில் இப்போட்டி காலை 10 மணிக்குத் தொடங்குகிறது.

---------

**சீனாவில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் Nikhil வெண்கலப் பதக்கம் வென்றார்.**

**<<<<The End>>>>**